**தலைப்பு 223 - இலங்கை கடற்படை**
**-------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்
**--------------------------**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
-------------------------------------------

இலங்கை கடற்படையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை கடற்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 21 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை கடற்படையின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை கடற்படையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை
**--------------------------------------------------------------------------**

இந்த அறிக்கையின் 1. 6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு
------------------------------------------------------------------------------------------------------------------

பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று**

நிதிக்கூற்றுக்களில் உரிய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **SA -**70 ஆம் இலக்க திறைச்சேரி அச்சு பிரதியின் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு பெறுமதி ரூபா 55,119,766,551 ஆக காணப்பட்ட போதிலும் ஒருங்கிணைந்த பரிட்சை மீதி பிரகாரம் அப் பெறுமதி ரூபா 50,521,170,364 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 4,598,596,187 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | குறியீட்டு எண்களின் மாற்றத்தினால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | திறைச்சேரி அச்சு பிரதியின் பெறுமதி ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பெறுமதியுடன் சமனாக காணப்படல் வேண்டும். |
| (ஆ) | **SA-**70 ஆம் இலக்க திறைச்சேரி அச்சு பிரதி பிரகாரம் கட்டுநிதி தீர்ப்பனவு பெறுமதி ரூபா 55,116,691,101 ஆக காணப்பட்ட போதிலும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 55,129,866,509 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 13,175,408 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டு தொடக்கம் அக் கைதவறுதல்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |
| (இ) | **SA-**71 ஆம் இலக்க திறைச்சேரி அச்சு பிரதியின் பிரகாரம் திறைச்சேரியிடமிருந்து பெறப்பட்ட கட்டுநிதி பெறுமதி ரூபா 52,544,883,159 ஆக காணப்பட்ட போதிலும், ஒருங்கிணைந்த பரீட்சை மீதி பிரகாரம் அப் பெறுமதி ரூபா 47,946,286,972 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 4,598,596,187 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கணக்கிடப்படும் போது நிகழ்ந்த இந்த தவறு சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 1.6.2 வணிக முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களஞ்சிய முற்பணக் கணக்கில் இறைவரி பணிப்பாளருக்கு வற் வரி செலுத்தலுக்காக குறிப்பிடப்பட்டிருந்த தகவல்கள் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்குரிய ஒட்டுமொத்த விற்பனை பெறுமதி (வற் வரி அற்ற) ரூபா 635,253,052 ஆக காணப்பட்டது. எனினும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்ட விற்பனை பெறுமதி (வற் வரி அற்ற) ரூபா 644,397,173 என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் விற்பனை பெறுமதி ரூபா 9,144,120 அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | மாதாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற விற்பனையை போன்று விற்பனைக்காக பெறப்பட்ட முற்பணமும் விற்பனையின் பின்னர் சீராக்கப்பட்டு விற்பனை பெறுமதி கணக்கிடப்பட்டுள்ளது. | விற்பனை பெறுமதி சரியாக கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | களஞ்சிய முற்பணக் கணக்கில் 2021 திசெம்பர் மாதத்திற்குரிய விற்பனை பெறுமதி ரூபா 55,063,010 ஆக காணப்பட்டதுடன் அதற்குரிய சீராக்கல் மேற்கொண்ட பின்னர் 2022 சனவரி மாதத்தின் விற்பனைக்காக செலுத்தப்பட்டிருந்த வற்வரி பெறுமதி ரூபா 1,282,885 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் அவ் வரி பொறுப்பு வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய வற் வரி பெறுமதியான ரூபா 3,155,443.29 இனுள் சனவரி மாதத்தில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,282,885 ஆன வற் வரி பெறுமதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் குறித்த வற் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | கொள்வனவு செய்யும் நோக்கில் களஞ்சியத்திற்கு வாங்குவோர் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த முற்பண பெறுமதி 2021 திசெம்பர் 31 இல் ரூபா 53,283,813 ஆக காணப்பட்டது. அப் பெறுமதியினுள் 05 ஆண்டுகளை மிகைத்து பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த முற்பண பெறுமதி ரூபா 1,467,799 அகும். அதற்கு மேலதிகமாக முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டு 03 மாதங்களை மிகைத்த பெறுமதி ரூபா 39,075,014 ஆக காணப்பட்டது. மேற்படி முற்பணங்கள் பெறுவனவு விற்பனை செய்யும் போது ஈடு செய்யப்படுவதற்கு அல்லது வாங்குவோருக்கு முறையாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு நடைமுறையில் நிலவுகின்ற சட்டரீதியான சிக்கல்கள் மற்றும் ஏற்றுமதி செய்யும் போது 03 மாதங்களை மிகைத்து காலம் கடக்கின்றமை இதற்கு காரணமாகியிருந்தன. | முறையாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | களஞ்சியசாலை முற்பண கணக்கின் 2021 திசெம்பர் 31 இல் தர பரிசோதனை கட்டண பெறுமதி ரூபா 86,000 ஆக காணப்பட்ட போதிலும் அத் திகதியில் பேரேட்டின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 2,066,475 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதிக் கூற்றில் மற்றும் பேரேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதிகளில் ரூபா 1,980,475 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கைதவறுதலாக சரக்கு கட்டணம் தர பரிசோதனை கட்டணமாக பேரேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்கிடும் போது சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் மற்றும் பேரேட்டில் பெறுமதிகள் சமமாக காணப்படுதல் வேண்டும். |

### 1.6.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றான திறைச்சேரி அச்சுப் பிரதி **SA** 82 பிரகாரம் 2021 ஆம் ஆண்டினுள் மூலதன சொத்துக்கள் கையகப்படுத்தல் ரூபா 1,462,396,608 ஆக காணப்பட்ட போதிலும் நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மூலதன சொத்துக்கள் கையகப்படுத்தல் ரூபா 1,466,477,733 என காண்பிக்கப்பட்டிருப்பதனால் ரூபா 4,081,125 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டின் கையகப்படுத்தப்பட்ட எனினும் சரியாக ஆவணப்படுத்தப்படாத சொத்துக்கள் எதிர்காலத்தில் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திறைச்சேரி அச்சு பெறுமதி மற்றும் நிதி செயலாற்றல் கூற்று இடையேயான பெறுமதி ஒன்றுடன் ஒன்று சமப்படுதல் வேண்டும். |

### 1.6.4 முற்பண கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனி மீதி வகைப்படுத்தல் பொழிப்பு கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ஒப்பிடும் போது ரூபா 21,625,626 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் பரிசோதனை குழுவொன்றின் பரிந்துரையின் அடிப்படையில் பதிவழிக்கப்படுவதற்காக முன்மொழியப்பட்ட போதிலும் அதற்கு தேவையான மேல் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு அமைச்சின் ஊடாக இந்த வேறுபாடு உருவாகிய விதம் ஆராய்தல் மற்றும் தேவையான பரிந்தரைகள் பெற்றுக் கொள்வதற்கு பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பதிவழித்தல் நடவடிக்கைகள் விரைவுப்படுத்தல் வேண்டும். |

### 1.6.5 கட்டுநிதி மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 சனவரி 01 இல் காணப்பட்ட ரூபா 13,175,408 ஆன தீர்ப்பனவு செய்யப்படாத உப கட்டுநிதி பெறுமதி மற்றும் ரூபா 32,640,758 ஆன தீர்க்கப்படாத கட்டுநிதி பெறுமதி திறைச்சேரிக்கு தீர்க்கப்பட்ட விதம் (செலவினத்தின் ஊடாக/பணத்தின் ஊடாக) தொடர்பாக ஏசீஏ 3 மாதிரியில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான கைதவறல்கள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | குறித்த மாதிரிகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டு அறிக்கையிடப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதியேற்பாட்டு பயன்பாடு

நிதிக் கூற்றுக்களில் குறித்த மீண்டெழும் செலவினங்கள் கணக்கிடும் போது பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி பிரமாணம் 50 பிரகாரம் செலவின மதிப்பீடு முடியுமான வரையில் சரியாக தயாரிக்கப்படல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக காணப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டில் மதிப்பிடப்படட்ட நிதியேற்பாடொன்று தயாரிக்கப்பட்டிராத மீண்டெழும் செலவின விடயமும் உள்ளடங்கலாக 09 செலவின விடங்களுக்காக நிதி பிரமாணம் 66 ஊடாக ரூபா 1,335,024,500 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்படாத செலவினங்கள் தீர்ப்பனவு செய்வதற்காக நி.பி 66 இன் கீழ் நிதியேற்பாடு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் முடியுமான வரையில் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 02 மீண்டெழும் செலவின விடயங்கள், மற்றும் 01 மூலதன செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடான ரூபா 69,300,000 ஆன முழு தொகையும் ஆண்டு இறுதியிலும் சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணம் ஒதுக்கப்பட்டதற்கான எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை. | அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணத்தினால் இந்த செலவின விடயங்களின் முழுமையான நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டுள்ளது. | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) உப பிரிவின் பிரகாரம் முதல் அட்டவணையில் தேசிய வரவு செலவு திணைக்கள செலவின தலைப்பு 240 அபிவிருத்தி நிகழ்ச்த்திச் திட்டத்தின் கீழ் துணை உதவி சேவைகள் மற்றும் அவசர சந்தர்ப்பங்கள் பொறுப்பு செயற்திட்டத்தினால் செலவின தலைப்பு இலங்கை 223 கடற்படைக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு முழுமையாக | சேமிக்கப்பட்ட நிதியேற்பாடு நாட்டின் வேறு அபிவிருத்தி நடவடிக்கையொன்-றிற்காக பங்களிப்பு செய்துக் கொள்வதற்காக தேசிய வரவுச் | பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியேற்பாடு முடியுமான வரையில் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | சேமிக்கப்பட்டு தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. செலவின தலைப்பு 2102 வாகனங்கள் கையகப்படுத்துவதற்காக 175 ஆம் அதிகார இலக்க குறை மதிப்பீட்டில் பெறப்பட்ட நிதியேற்பாடான ரூபா 3,685 மில்லியன் முழுமையாக பயன்படுத்தப்பட்டிராததுடன் முழு நிதியேற்பாடும் மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 30 ஆம் திகதி 175 ஆம் அதிகார இலக்கம் இரத்து செய்யப்பட்டு அத் தருணத்தில் உட்பட்டிருந்த கடப்பாடுகளுக்காக இயந்திரங்கள் மற்றும் இயந்திரத் தொகுதிகள் கையகப்படுத்துவதற்கு தேவையான நிதியேற்பாடு அதிகார எண் 1063 இன் கீழ் ஒதுக்கப்பட்டிருந்தது. | செலவு திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஈ) | 2103 செலவின தலைப்பு இயந்திரம் மற்றும் இயந்திர தொகுதிகள் கையகப்படுத்திக் கொள்வதற்காக 175 ஆம் அதிகார இலக்க குறைநிரப்பு நிதியேற்பாட்டில் ரூபா 3,842.26 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் பயன்படுத்தப்பட்டிருந்தது ரூபா 43.03 மில்லியன் மட்டுமாகும். ரூபா 3,799.23 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு சேமிக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு தீர்ப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் 175 ஆம் இலக்க அதிகார இலக்கம் இரத்து செய்யப்பட்டு அதன் போது ஏற்படுத்திக் கொண்டிருந்த கடப்பாட்டிற்காக தேவையான நிதியேற்பாடு அதிகார இலக்கம் 1063 இன் கீழ் ரூபா 1,427.26 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் அதில் செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 43.03 மில்லியன் ஆகியமையினால் சேமிப்பு ரூபா 1,384.23 மில்லியன் ஆக காணப்பட்டது. பெறப்பட்ட நிதியேற்பாட்டில் 97 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் நாட்டின் வேறு அபிவிருத்தி நடவடிக்கை-யொன்றிற்கு பங்களிப்பு செய்துக் கொள்வதற்கு மீண்டும் தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது. | -மேற்படி- |
| (உ) | 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் ஊடாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 100,000,000 ஆக காணப்பட்டது. அது முழுமையாக பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன் தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு மீண்டும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | குறைநிரப்பு மதிப்பீட்டின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு முழுமையாக பயன்படுத்தாமை நேர்ந்திருக்கவில்லை. | -மேற்படி- |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கடப்பாடுகளுக்கு உட்பட்ட அனைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களும் குறிப்பு **(iii)** இன் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டின் மூலதன செலவின விடயங்கள் தொடர்பான உறுதிச்சீட்டுக்கள் பரீட்சிக்கும் போது ரூபா 22,592,030 பெறுமதியான 19 உறுதிச்சீட்டுக்கள் பொறுப்புக்களாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த கைதவறுதல் ஏற்படாதிருக்க குறித்த பிரிவுகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிராத பெறுமதி ரூபா 4,092,757 ஆன மீளாய்வாண்டிற்குரிய கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் 2022 ஆம் ஆண்டின் நிதியேற்பாட்டில் செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பொறுப்பு கூறக்கூடிய பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டு சரியான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றொன்று எதிர்காலத்தில் அறிக்கையிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த ஆண்டிற்கு உரியதான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அவ் ஆண்டினுள்ளேயே தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் பிரதிநிதியாக கடற்படைக்கு வழங்கப்பட்ட மொத்த நிதியேற்பாடு ரூபா 637,879,410 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாரான செலவினம் ரூபா 402,986,455 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட நிதியேற்பாடு 59 சதவீதமாகும். | கட்டுநிதி போதுமானதாக பெறப்படாமையினால் உரிய திகதிக்கு உறுதிச் சீட்டுக்கள் தீர்ப்பனவு செய்ய முடியாமையின் காரணத்தினால் இந்த வேறுபாடு உருவாகியுள்ளது. | நிதியேற்பாடு சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| **(அ)** | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதி பிரமாணம் 371 (2) | உத்தியோகத்தரின் பெயருக்கு முற்பணம் வழங்குவதற்கு பதிலாக பதவி பெயருக்கு அல்லது பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. | நிர்வாக நிலை உத்தியோகத்தர்களுக்கு மட்டும் வழங்கப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) நிதி பிரமாணம் 371 (2) (ஆ) | பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணம் குறித்த பணி நிறைவடைந்தவுடனே தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் அதிலிருந்து விலகி தீர்ப்பனவு செய்வதற்கு 09 நாட்கள் தொடக்கம் 100 நாட்கள் வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | முற்பணம் பெற்றுக் கொள்ளும் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| | (iii) நிதி பிரமாணம் 371 (4) | கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆனாலும் உரிய மற்றும் தேவையற்ற பணிகளுக்காக இடைக்கால கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்படக் கூடாத போதிலும் 23 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட இடைக்கால கட்டுநிதி தொகை முழுமையாக அல்லது அதிகளவு மீண்டும் பணமாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே குறித்த தொகை விளைவற்றதாக காணப்பட்ட காலப்பகுதி 06 நாட்கள் தொடக்கம் 09 மாதங்கள் வரையாக காணப்பட்டது. | இடைக்கால கட்டுநிதி வழங்கல் மற்றும் தீர்ப்பனவு செய்தல் விலகல்கள் ஏற்படாத வண்ணம் முறையான முறைமையொன்றின் பிரகாரம் செயற்படுத்துவதற்கு குறித்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | நிதி பிரமாணம் 504 | வணிக முற்பண கணக்கொன்று பேணிச் செல்லும் சந்தர்ப்பமொன்றில் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் வணிக கடன்கொடுநர்கள், இருப்பு மற்றும் பொருள் உடமைகள் தொடர்பான மாதாந்த பரிசோதனை அறிக்கை, சந்தர்ப்பத்திற்கேற்ப இலாபநட்ட கணக்கு மற்றும் மாதாந்த கணக்கு பொழிப்பு தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாண்டிற்குரிய கணக்கு கூற்று தற்போது தயாரிக்கப்படுள்ளதுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (v) | நிதி பிரமாணம் 507 | ஒவ்வொரு ஆண்டிலும் திசெம்பர் 31 இல் இருப்புக்களின் பெறுமதி வருடாந்த கணக்குகளுக்கு உள்ளடக்கும் பணிகளுக்காக இருப்பு பௌதீக மெய்மையாய்விற்கு உட்படுத்தப்படல் வேண்டும். அவ் இருப்பு மெய்மையாய்வு குழு அறிக்கை கணக்கு அறிக்கையுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் களஞ்சிய முற்பண கணக்கின் 2021 திசெம்பர் 31 இல் ரூபா 137,844,869 ஆன இருப்பு மெய்மையாய்வு மேற்கொண்ட ஆய்வு குழு அறிக்கை கணக்குடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் இறுதி கணக்குடன் இருப்பு மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| **(ஆ)** | 2021 நவம்பர் 26 திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிக்காட்டி | நிதிக் கூற்றுக்கள் மாதிரியில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் கடந்த ஆண்டின் ஒப்பீட்டு பெறுமதிகள் மீண்டும் சீராக்கல் தொடர்பாக குறிப்பொன்று நிதிக் கூற்றுக்கள் அறிக்கையிடும் அடிப்படையின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க-வில்லை. | எதிர்காலத்தில் அந்த கைதவறுதல்கள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வட மத்திய கடற்படை கட்டளைக்கு சொந்தமான கணக்கு எண் 7041349 இன் கீழ் காலாவதியாகிய அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாத பொது வைப்புக்கள் கணக்கு மீதி ரூபா 218,518 ஆக காணப்பட்டதுடன் காலங்கடந்த காலம் 24 மாதங்கள் தொடக்கம் 58 மாதங்கள் வரையாகும். | அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாத பொது வைப்புக்கள் மீதி 2022 மார்ச் மாத்தில் தீர்க்கப்பட்டிருந்தது. | காலம் கடந்துள்ள வருமானம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.6 கட்டுநிதி கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டி இல 06 இன் 2.4 ஆம் பந்தி பிரகாரம் மற்றும் நிதி பிரமாணம் 371(5) ஆம் பிரிவின் பிரகாரம் எவ்வாறான இடைகால கட்டுநிதியானாலும் அக் கட்டுநிதி மீண்டும் தீர்க்கப்படும் போது அக் கட்டுநிதி வழங்கப்பட்ட நிதி ஆண்டின் திசெம்பர் 31 இல் எந்தவொரு பங்கும் நிறுத்தி வைக்கப்படக் கூடாதமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 3,075,450 ஆன தீர்க்கப்படாத உப கட்டுநிதி மீதியொன்று காணப்பட்டது. | திறைச்சேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 3,075,450 ஆன தற்காலிக இடைகால கட்டுநிதி 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாது 2022 ஆம் ஆண்டிற்கு முன்கொண்டு செல்ல நேருவதாக திறைச்சேரி செயற்பாடுகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் ணே்டும். |

## 2.7 அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 ஆண்டுகளை மிகைத்த அறவிடப்படுவதற்குள்ள ஏனைய கடன் மீதி, சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி மற்றும் ஓய்வுப் பெற்ற உத்தியோகத்தர்களின் | பாதுகாப்பு அமைச்சிலிருந்து நியமிக்கப்பட்ட புதிய குழுவொன்றின் ஊடாக ஏனைய கடன் மீதி அறவிடப்படுவதற்கு தொடர்புடையதாக பரீட்சிக்கப்பட்டு வருகின்றுதுடன் | அரசிற்கு அறவிடப்படுவதற்குள்ள கடன் மீதிகள் விரைவாக அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கடன் மீதி முறையே ரூபா 18,180,159 மற்றும் ரூபா 673,693 மற்றும் ரூபா 481,754 ஆக காணப்பட்டது. | சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி அறவிடப்படுவதற்காக குறித்த நினைவூட்டல் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>மேலும் ஓய்வுப் பெற்ற 05 உத்தியோகத்தர்களுக்கு எதிராக காணப்படுகின்ற பரிசோதனை குழு அறிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிராமையினால் கணக்கில் அறவிடப்படுவதற்குள்ள மீதியாக இன்னுமாக காண்பிப்பதற்கு நேர்ந்துள்ளது. | எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அரசின் திணைக்களங்கள்/ அமைச்சுக்களுக்கு இடமாற்றப்பட்டு சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 105,959 ஆக காணப்பட்டதுடன் அறவிடப்படாதிருந்த காலம் 04 ஆண்டுகளை மிகைத்திருந்தது. | உள்ளூராட்சி நிறுவனத்திற்கு இடமாற்றப்பட்டு சென்ற இரு உத்தியோகத்தர்களின் கடன் மீதி மாதாந்த சம்பளத்திலிருந்து தவணைகளாக அறவிடப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக நிதியேற்பாடு பெற்றபடாமை மற்றும் கடனுறுதி கடிதங்கள் திறப்பதற்காக அந்நிய செலாவணி இல்லாமை காரணத்தினால் ஒப்பந்தம்/ கட்டளை பெறுமதி ரூபா 528,005,056 ஆன 16 உறுப்படிகளுக்கான வெளிநாட்டு கொள்வனவுகள், கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தது. | கடனுறுதி கடிதங்கள் திறப்பதற்காக அந்நிய செலவாணி இல்லாமை மற்றும் போதுமான நிதியேற்பாடு இல்லாமை காரணத்தினால் கொள்வனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. | தேவையான நிதியேற்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இருப்பினை வழங்குவதற்கு வழங்குனரினால் முடியாது போதல் மற்றும் இறுதி பற்றுச் சீட்டு தீர்ப்பனவு செய்யப்படாமை ஆகிய காரணங்களினால் கட்டளை பெறுமதி ரூபா 237,472,647 ஆன உத்தியோகப்பூர்வ ஆடைகள் உரிய திகதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய திகதிக்கு இருப்பு வழங்குவதற்கு வழங்குனரினால் முடியாது போதல், இருப்பு வழங்கப்படுவதற்கான காலம் நீடிக்கப்படுதல் மற்றும் இறுதி பற்றுச் சீட்டு தீர்ப்பனவு செய்யாமை ஆகிய காரணங்களினால் உத்தியோகப்பூர்வ ஆடைகள் | ஒப்பந்தம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | உரிய திகதிக்கு வழங்குவதற்கு முடியாது போனது. |

**3.2 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடக்கு கடற்படை கட்டளையினால் ரூபா 8,184,704 ஆன தொகை ஏற்கப்பட்டுள்ள ஊறணி மீன்பிடி துறைமுகத்தின் அலைமுறி இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. | ஊறணி மீன்பிடி துறைமுகத்தில் அலைமுறி நிர்மாணிக்கும் செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மாவட்ட செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு எஞ்சிய பணத்தினை மீண்டும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொதுமக்களின் பணம் மிகவும் பொருளாதார ரீதியாக மற்றும் சிக்கனமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிராத படகுகள்/ கப்பல்களின் அளவு 09 ஆக காணப்பட்டதுடன் காலம் 05 மாதங்கள் தொடக்கம் 17 மாதங்கள் வரை மிகைத்திருந்தது. | பழுதுபார்த்தலுக்காக தேவையான மேலதிக பாகங்கள் கட்டளையிடப்பட்டுள்ள-துடன் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விரைவாக புழுதுபார்த்தல்கள் நிறைவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | விளைவற்று காணப்படுகின்ற 16,609.5 சதுர அடியிலான கட்டிடங்கள் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் இது வரையில் நிறைவு செய்யப்பட்டிராததுடன் 05 ஆண்டுகள் காலத்தினை மிகைத்திருந்தது. | கையகப்படுத்தல் நடவடிக்கைகள் இன்னுமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிய வகையில் கையகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவுப்படுத்தல் வேண்டும். |
| (இ) | கடற்படைக்கு சொந்தமான 13 மோட்டார் வாகனங்கள் வெளி தரப்பினருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | தற்காலிக அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | வெளி தரப்பினருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள வளங்கள் மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான 25,502 சதுர அடியிலான கட்டிடத்தின் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் 05 ஆண்டு காலம் தொடக்கம் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கையகப்படுத்தல் நடவடிக்கைகள் இன்னுமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிய வண்ணம் கையகப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (உ) | வயம்ப கடற்படை கட்டளைக்கு சொந்தமான பழுதுபார்த்தல்கள் பொருளாதார ரீதியாக பயனற்றதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 07 வாகனங்களுக்காக பொருத்தமானதை செய்வதற்காக பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கு தேவையான மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 07 வாகனங்கள் தொடர்பாக பொருத்தமானதை செய்வதற்காக கடற்படை தலைமையகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | பழுதுபார்த்தல், பயனற்ற சொத்துக்களுக்காக தேவையான மேல் நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை கடற்படையினால் பயன்படுத்தப்படுகின்ற ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு சொந்தமான காணிகளின் அளவு 435.4223 ஹெக்டெயர் ஆவதுடன் அக் காணிகளுக்கான முறையான அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சில காணிகள் பயன்படுத்தப்பட்டிருந்த காலம் 08, 14 மற்றும் 22 ஆண்டுகளை மிகைத்திருந்தன. | முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு தேவையான மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | காணி பயன்பாடு தொடர்பாக முறையான அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 ஆண்டுகளுக்கு முன்னர் வெடி மருந்து களஞ்சியத்தினுள் நிகழ்ந்த ரூபா 8,314,236 ஆன நிதி விலகல் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகள் இது வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வழக்கு விசாரணை 2022 யூன் 24 ஆம் திகதி மீண்டும் அழைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | புலனாய்வு நடவடிக்கைகள் விரைவுப்படுத்தப்பட்டு நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டினுள் இலங்கை கடற்படையினால் சட்ட விரோதமான வெடிப்பொருட்கள் அருகே வைத்துக்கொண்டமை கண்டுபிடிக்கப்பட்ட போது கைப்பற்றப்பட்ட 41.012 வாட்டர் ஜெல் மற்றும் 542 அலகுகள் ப்லேன் டெடனேட்டர் இலங்கை பொலீசிற்கு கையளித்தல் தொடர்பான பின்னூட்டல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பின்னட்டல் அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்கு குறித்த பொலிஸ் நிலையம் அல்லது மீன்பிடி பரிசோதனை அலுவலகத்துடன் ஒருங்கிணையுமாறு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | பொலீசிற்கு ஒப்படைக்கப்பட்ட சட்ட விரோத வெடிபொருட்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பின்னூட்டல் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | உரிய காலவரையறையினுள் பெறப்பட்டுள்ள மின்சார பற்றுச்சீட்டுக்கள் தீர்ப்பனவு செய்யாமை காரணத்தினால் ரூபா 685,792 மிகை கட்டணமாக செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது. | பொருந்தாது. | மிகை கட்டணம் செலுத்தாதிருக்க, செலுத்த வேண்டிய கட்டணம் உரிய நேரத்தில் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | கடற்படைக்கு தேவையான ஔடத தேவை வைத்திய வழங்கல் பிரிவின் ஊடாக கொள்வனவு செய்வதற்காக திணைக்கள பெறுகை குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போது, உயர் விலைகளின் கீழ் உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து அவ் ஔடத தேவை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமையினால் ரூபா 33,400,776 மேலதிகமாக செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது. | தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு பரிசோதனை குழுவொன்று மற்றும் ஆய்வு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக் குழுக்களினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற பரிந்துரைகளுக்கு அமைவாக மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலேயும் வைத்திய வழங்கல் பிரிவிலிருந்து தேவையான வசதிகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைநதுக் கொள்வதற்காக 11 இலக்குகள் அடையாளப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இலக்குகள் அடைவதில் உள்ள சாதனைகள் மற்றும் சவால்களின் சதவீத மதிப்பீடு செய்வது நடைமுறையில் கடினமாக காணப்பட்டது. | அடையப்பட வேண்டிய இலக்குகள் தொடர்பாக பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நோக்கங்கள் அடைந்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிவில் பதவியணியினுள் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டத்தின் 487 பதவிகள், அதாவது 25 சதவீதம் வெற்றிடமாக காணப்படுகின்றது. | ஆட்சேர்ப்புக்கள் மீண்டும் அறிவிக்கும் வரையில் நிறுத்தப்பட்டுள்ளமையினால் கடற்படை சிவில் பதவியணியின் வெற்றிடங்களுக்காக பதவியணி இணைத்துக் கொள்வதற்கு முடியாதுள்ளது. | தேவை கருத்திற் கொள்ளப்பட்டு வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்படை பதவிகள் முறையே 256 மற்றும் 6102 ஆன வெற்றிடங்கள் காணப்பட்டன. அவை முறையே 7 சதவீதம் மற்றும் 12 சதவீதமாக காணப்பட்டன. | இந்த வெற்றிடம் எதிர்வரும் ஆண்டுகளில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |